வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 12.03.2026 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

வேளாண்மை, மற்றும், வேளாண்சார் துறையில் ஈடுபட்டுள்ள பெண்கள் இடையே, தலைமைப் பன்பை ஊக்குவித்தல் அவசியம் என்று, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை முதல், அசாமிற்கு 2 நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்.

தமிழகத்தில் பொறுப்பு ஆளுநராக திரு. ஆர்.வி. அர்லேக்கர் இன்று பதவியேற்றுக் கொண்டார்.

புதுச்சேரியில் பெட்ரோல் தட்டுப்பாடு இல்லை என்று, பெட்ரோல் பங்க் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

---

*முர்மு வேளாண்மை (16)*

வேளாண்மை, மற்றும், வேளாண்சார் பொருட்களின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பெண்கள் இடையே, தலைமைப் பன்பை ஊக்குவித்தல் அவசியம் என்று, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், **வேளாண் உணவுச் சூழலில் மகளிர் பங்கேற்பு** என்பது குறித்த உலக மாநாட்டை தொடக்கி வைத்து பேசிய அவர், வேளாண் துறையில் எல்லா நிலைகளிலும் மகளிர் பங்கேற்பை ஊக்குவிப்பதால், வளர்ச்சி மட்டுமின்றி, ஆண்-பெண் சமத்துவமும் அதிகரிக்கும் என்றார். இந்தியாவில் பெண்களின் தலைமையிலான வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப் படுவதை அவர் சுட்டிக் காட்டி,

எல்லா நாடுகளும் இத்தகைய நிலைப்பாட்டை பின்பற்றினால், உலகில் மனிதன் வாழ்வதற்கேற்ற நல்லிணக்கச் சூழல் மேம்படும் என்றார்.

இந்த 3 நாள் மாநாட்டின் தொடக்க விழாவில், மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌகான் பேசுகையில், வேளாண் ஆராய்ச்சிப் பணிகளை, பெண்களை மையமாக கொண்டதாக மாற்றி அமைக்கும் வகையில், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம், விரைவில் தனி இணைய தளம் ஒன்றை தொடக்கும் என்றார்.

---------------------------

*மோடி அசாம்* 1 (8)

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை முதல், அசாமிற்கு 2 நாள் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார். நாளை பிற்பகல், கோக்ராஜார் சென்று சேரும் அவர், அங்கு நடைபெறும் விழாவில், மொத்தம் 10 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில், பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடக்கி வைத்தும், வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் உரையாற்றுகிறார். பிரதமர் தொடக்கி வைக்கும் திட்டங்களில், 3 புதிய ரயில் சேவைகளும், அவர் அடிக்கல் நாட்டும் திட்டங்களில், 6 புதிய பாலங்களும் அடங்கும். பிரதமரின் அசாம் பயணம் குறித்து கூடுதல் விவரங்கள்.....

**(வாய்ஸ்)**

*மோடி அசாம்* 2 (13)

**(வாய்ஸ்)**

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை மாலை, குவஹாத்தி சென்று, 150 மெகாவாட் கொப்பிலி நீர் மின் நிலையத்தின் திறப்பு விழா, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு இலவச மனைப் பட்டா வழங்கும் விழா, மற்றும், 9.32 லட்சம் விவசாயிகளுக்கு, மொத்தம் 18 ஆயிரத்து 640 கோடி ரூபாய் பிஎம்- கிசான் நிதி வழங்கும் விழாவில் கலந்து கொள்கிறார். நாளை இரவு குவஹாத்தியில் தங்கிய பின்னர், அவர் நாளை மறுநாள் சில்ச்சார் சென்று, மொத்தம் 24 ஆயிரத்து 205 கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு திட்டங்களை தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். பிரதமர் அடிக்கல் நாட்டும் திட்டங்களில், சில்ச்சார்-குவஹாத்தி விரைவுச் சாலைத் திட்டமும்

அடங்கும். இது அல்லாது, சில்ச்சார்-பதர்பூர்-சுராய்பாரி மின்சார ரயில் இணைப்புத் திட்டத்தையும், பிரதமர் தொடக்கி வைக்கிறார். சில்ச்சார் நிகழ்ச்சிகள் முடிந்த பின்னர், பிரதமர் அங்கிருந்து, கொல்கத்தா புறப்பட்டு செல்வார் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

----------------------------

*தண்டி யாத்திரை* (10)

1930ஆம் ஆண்டு இதே நாளில், மகாத்மா காந்தி தலைமையிலான தண்டி யாத்திரையில் பங்கேற்ற அனைத்து விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், பிரதமர் திரு. நரேந்திர மோடி, புகழஞ்சலி செலுத்தி உள்ளார். உண்மையே எப்போதும் வெல்லும் என்பது குறித்த சமஸ்கிருத ஸ்லோகம் ஒன்றை, பிரதமர் சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டு, இறுதியில் பொய்மை தோற்கும் என்பதே உறுதி என்றும் கூறியுள்ளார். குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், மக்களவைத் தலைவர் திரு. ஓம். பிர்லா, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா உள்ளிட்ட தலைவர்களும், தண்டி யாத்திரையில் பங்கேற்ற விடுதலை போராட்ட வீரர்களுக்கு புகழஞ்சலி செலுத்தி, செய்திகளை வெளியிட்டுள்ளனர்.

----------------------------

*மக்களவை* 1 *(16 )*

இன்று மக்களவையில், நடப்பு 2025-26ஆம் நிதியாண்டிற்கான 2ஆம் தொகுப்பு துணை மானியக் கோரிக்கைகள், விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. 61 இனங்களில், மொத்தம் 2 லட்சத்து 81 ஆயிரம் கோடி ரூபாய் கூடுதல் நிதிக்கு, அரசு இந்த 2ஆம் தொகுப்பில், அவையின் அனுமதியை நாடி உள்ளது. பிஜேபி உறுப்பினர் திரு. ஜெகதாம்பிகா பால், விவாதங்களை தொடக்கி வைத்து பேசுகையில், மேற்காசிய நிலவரங்கள் காரணமாக, கச்சா எண்ணெய்-யின் விலை அதிகரித்து விட்டதால், இந்தியாவில் நடப்பு நிலவரங்களை எதிர்கொள்ள, கூடுதல் மானியங்கள் அவசியம் என்றார்.

எல்பிஜி நெருக்கடி குறித்து, விவாதம் கோரியும், வேறு பல பிரச்சனைகளை வலியுறுத்தியும், முன்னதாக, மக்களவையில்

எதிர்கட்சிகள் ஏற்படுத்திய அமளி காரணமாக, அவையின் அலுவல்கள் 2 முறை ஒத்தி வைக்கப்பட்டன. எல்பிஜி நெருக்கடி குறித்த எதிர்கட்சிகளின் ஒத்தி வைப்பு தீர்மானம் மீது, உடனடியாக விவாதிக்க வேண்டும் என, காங்கிரஸ் உறுப்பினர் திரு. கே.சி வேணுகோபால் கோரியபோது, எதிர்கட்சிகளின் நோட்டீஸ் தமக்கு கிடைத்து இருப்பதாகவும், இதுகுறித்து

*மக்களவை 2* (5)

அரசுக்கு தகவல் தரப்பட்டுள்ளதாகவும், திரு. ஓம். பிர்லா கூறினார். பிரச்சனை மிக முக்கியமானது என்றும், இதற்கு பதில் அளிக்கவே அரசு விரும்புவதாகவும், நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கூறிய போதிலும், அவையில் அமளி நீடித்ததால், அலுவல்கள் மதியம் 2 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டன.

---------------------------

*மாநிலங்களவை* (10)

மாநிலங்களவையில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகத்தின் செயல்பாடுகள் குறித்த விவாதம் இன்று, தொடர்ந்து இடம்பெற்றது. கிராமங்கள், மற்றும், கிராமப்புற மக்களின் அதிகாரத்தை, பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு, பலமடங்கு மேம்படுத்தி இருப்பதாக பிஜேபி உறுப்பினர் டாக்டர் சங்கீதா பல்வந்த், விவாதங்களில் பங்கேற்று பேசுகையில் கூறினார். முந்தைய காங்கிரஸ் அரசால் கொண்டுவரப்பட்ட, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடுகளை, நடப்பு அரசு குறைத்து விட்டதாகவும், நிதிச் சுமை, மாநில அரசுகள் மீது சுமத்தப் பட்டுள்ளதாகவும், காங்கிரஸ் உறுப்பினர் திரு. சக்தி சிங் கோஹில் குற்றம் சாட்டினார்.

---------------------------

*தமிழ்நாடு ஆளுநர்* (9)

தமிழகத்தில் பொறுப்பு ஆளுநராக திரு. ஆர்.வி. அர்லேக்கர் இன்று பதவியேற்றுக் கொண்டார். சென்னை லோக்பவனில் நடைபெற்ற விழாவில், சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு. எஸ்.ஏ. தர்மாதிகாரி, திரு. அர்லேக்கருக்கு, பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், மாநில அமைச்சர்கள், மூத்த அதிகாரிகள், மற்றும், சிவில் சமூக பிரமுகர்கள், விழாவில் கலந்து கொண்டனர். தமிழக ஆளுநராக இருந்த திரு. ஆர்.என். ரவி, அண்மையில் மேற்குவங்கத்திற்கு மாற்றப்பட்டு, கேரள ஆளுநர் திரு. அர்லேக்கர், தமிழகத்தின் பொறுப்பு ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

---------------------------

*புதுச்சேரி பெட்ரோல் (8)*

புதுச்சேரியில் பெட்ரோல் தட்டுப்பாடு இல்லை என்றும், தேவைக்கேற்ற அளவிற்கு கையிருப்பு உள்ளதால், மக்கள் வதந்திகளை நம்பி அச்சமடையத் தேவையில்லை என்றும், பெட்ரோல் பங்க் உரிமையாளர்கள் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திரு. முருகேசன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து இன்று அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், பெட்ரோல்-டீசலை கேன் அல்லது பாட்டிலில் வாங்கி வைப்பது ஆபத்தானது என்பதால், மக்கள் இதை தவிர்க்க வேண்டியது அவசியம் என்றார். திரு. முருகேசன் பேட்டியில் இருந்து ஒருபகுதி.....

(வாய்ஸ்-முருகேசன்)

----------------------------

*புதுச்சேரி அறிவியல் (7)*

புதுச்சேரியில் உள்ள டாக்டர் அப்துல்கலாம் அறிவியல் மையம் மற்றும் கோளரங்கில், பராமரிப்புப் பணிகள் காரணமாக, கோளரங்கக் காட்சிகள், தற்காலிகமாக ரத்து செய்யப் பட்டுள்ளன. அறிவியல் மையம், மற்றும், புத்தாக்க மையம் வழக்கம் போல் செயல்படும் என்றும், கோளரங்கக் காட்சிகள் மீண்டும் தொடங்குவதற்கான அறிவிப்பு, பராமரிப்புப் பணிகள் முடிந்த பிறகு வெளியிடப்படும் என்றும், புதுச்சேரி அறிவியல்-தொழில்நுட்ப மாமன்றம், செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது.

----------------------------

*மாஹே (7)*

நாட்டின் கடல்சார் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில், தமிழ்நாடு மற்றும் கேரள கடற்கரை பகுதிகளில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, சாகர் கவச் கடல்சார் பாதுகாப்பு ஒத்திகை பயிற்சி, மாஹேயில் இன்று நடைபெற்றது. கடற்படை, கடலோரக் காவல் படை, கடலோர போலீஸ், மற்றும், உள்ளூர் போலீசார், மீன்வளம், மற்றும், பல்வேறு நிர்வாகத் துறையினரின் ஒருங்கிணைப்புடன், இப்பயிற்சியில் பங்கேற்றனர். நாளையும் இப்பயிற்சி தொடரும் என, எமது மாஹே நிருபர் தெரிவிக்கிறார்.

---------------------------

தரவு (17)

இந்தியாவில் தனித்தனித் துறைகள், அமைப்புகள், மற்றும், நிறுவனங்களின் சேமிப்பில் உள்ள பல்வேறு தரவுகளை ஒருங்கிணைப்பதன் மூலமாகவே, வளர்ச்சியை தூண்டி, 2047ஆம் ஆண்டிற்குள் 30 ட்ரில்லியன் டாலர் பொருளாதாரமாக மேம்பட முடியும் என்று, மத்திய அறிவியல்-தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் செயல்படும் புவி-வெளித் தரவுகள் மேம்பாட்டுக் குழுவின் தலைவர் திரு. ஸ்ரீகாந்த் சாஸ்திரி கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், பாரத் ஸ்பேஸ், விண்வெளி மாநாட்டின் தொடக்க விழாவில் உரையாற்றிய அவர், தரவுகளை ஒருங்கிணைப்பதன் மூலம் எத்தகைய வெற்றிகளை சாதிக்கலாம் என்பதற்கு பிரதமரின் கதி சக்தி திட்டம் சிறந்த எடுத்துக்காட்டு என்றார். இத்திட்டத்தின் கீழ், பயணிகள் போக்குவரத்து, சரக்குப் போக்குவரத்து, மற்றும், போக்குவரத்து கட்டமைப்பு தொடர்பான தரவுகள், ஒருங்கிணைத்துப் பயன்படுத்தப் படுவதை அவர் சுட்டிக் காட்டினார். இந்தியத் தொழில்கள் கூட்டமைப்பு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த இம்மாநாட்டில், நாட்டின் விண்வெளி மற்றும் புவி-வெளிப் பொருளாதாரத்தை, 40 பில்லியன் மதிப்பிற்கு உயர்த்துவதற்கான திட்டங்கள், கொள்கைகள், மற்றும், ஒத்துழைப்பு உத்திகள் குறித்து, விரிவாக விவாதிக்கப்பட்டது.

---------------------------

என்சிசி (13)

தேசிய மாணவர் படையின் கூடுதல் தலைமை இயக்குநர்கள், மற்றும், துணை தலைமை இயக்குநர்கள் இடையிலான 2 நாள் மாநாடு, புதுடெல்லியில் இன்று தொடங்கி உள்ளது. பாதுகாப்புத் துறைச் செயலர் திரு. ஆர்.கே. சிங், இம்மாநாட்டில் பேசுகையில், 2047ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய இந்தியா என்னும் தொலை நோக்குப் பார்வைக்கு ஏற்ப, தேசிய மாணவர் படையில் புதிய மாற்றங்களை கொண்டு வருதல் அவசியம் என்றார். தேசிய மாணவர் படையின் செயல்பாடுகள், வளர்ச்சி குறித்த அரசின் திட்டங்கள், மற்றும், கொள்கைகளுக்கு ஏற்ப அமைந்தால், தேசிய மாணவர் படையின் நோக்கங்களையும் முழுமையாக எட்ட

ஏதுவாகும் என்றார். என்சிசி தலைமை இயக்குநர் திரு. வீரேந்திர வத்ஸ், மாநாட்டின் தொடக்க விழாவில் பேசுகையில், தேசிய மாணவர் படையை விஸ்தரிக்க, கடந்த 10 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முயற்சிகளை எடுத்துக் கூறினார்.

---------------------------

*வானிலை* (12)

வரும் 16ஆம் தேதி வரை, தென்தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில், ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக் கூடும் என்றும், தமிழத்தின் இதர பகுதிகள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், வறண்ட வானிலை நிலவும் என்றும், சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 17-18 ஆகிய தேதிகளில், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், மற்றும், அதை ஒட்டிய மாவட்டங்களில், மிதமான மழையும், தென்தமிழகத்தின் கடலோர மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள், மற்றும்,காரைக்கால் பகுதியில், லேசான மழையும் எதிர்பார்க்கப் படுகிறது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக நெல்லை மாவட்டம் ஊத்து பகுதியில், 4 செ.மீ மழை பதிவாகி உள்ளது. குறைந்தபட்ச வெப்பநிலையாக, குன்னூரில், 7.9 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகி உள்ளது.

---------------------------

*மக்களவை வைஷ்ணவ்* (9)

ரயில்வே துறையில் பயணிகளின் பாதுகாப்பு மற்றும் செயல்திறன் மேம்பாட்டை உறுதிப்படுத்த, அதிநவீன ஏஐ மற்றும் இயந்திரக் கற்றல் முறைகள் பயன்படுத்தப் படுவதாக, ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார். இன்று மக்களைவையில் எழுத்து மூலமான பதில் ஒன்றில் அவர் இதை தெரிவித்தார். ரயில்பாதைகளை தொடர்ச்சியான முறையில் கண்காணிக்க, ஒருங்கிணைந்து கண்காணிப்பு முறைகள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், மூடுபனி உட்பட சாதகமற்ற பருவநிலையில், ரயில் எஞ்சின் டிரைவர்களுக்கு உதவ, திரி – நேத்ரா தொழில்நுட்ப வசதி உருவாக்கப்பட்டு வருவதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

---------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

வேளாண்மை, மற்றும், வேளாண்சார் துறையில் ஈடுபட்டுள்ள பெண்கள் இடையே, தலைமைப் பன்பை ஊக்குவித்தல் அவசியம் என்று, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை முதல், அசாமிற்கு 2 நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்.

தமிழகத்தில் பொறுப்பு ஆளுநராக திரு. ஆர்.வி. அர்லேக்கர் இன்று பதவியேற்றுக் கொண்டார்.

புதுச்சேரியில் பெட்ரோல் தட்டுப்பாடு இல்லை என்று, பெட்ரோல் பங்க் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.